RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI:10.34256/irjt22226

# பிச்சிப்பூ நாவலில் பொருள் சார் பண்பாடு

சு. வினோதா [அ, *]

[அ] தமிழ்த்துறை, சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம்-636005, தமிழ்நாடு, இந்தியா

# Materialistic Culture in Ponnelan’s Pichipoo Novel

S. Vinotha [a, *]

[a] Department of Tamil, Sona College of Arts and Science, Salem-636005, Tamil Nadu, India

* Corresponding Author: srimegha775@gmail.com

Received: 24-02-2022
Revised: 20-04-2022
Accepted: 21-04-2022
Published: 29-04-2022

Check for updates

**ABSTRACT**

Literature spectacles for knowing the culture discovered by human society. Theories are the criteria by which to classify and measure it. Thus all the materials used by man reveal his knowledge, thought, nature of the soil, habitat, etc. Material culture, which is an integral part of cultural anthropology. The culture is explored based on the following material types. Material culture is the study of a person's habitat, diet, clothing, equipments, transport equipments, other tools, sports equipments, currencies, etc. One of the works of Ponnilan, (the creator of Nanjil) is the short story 'Pichippoo'. Its purpose is to explore with the use of material reported in the Novel.

**Keywords:** Materialistic Culture, Nanjil, Pichipoo Novel, Sangam literature.

## முன்னுரை

இலக்கியங்கள் மானுட சமுதாயத்தைப் பதிவு செய்வதில் முக்கியப்பங்காற்றுகின்றன. அதிலும் குறிப்பாகத் தற்கால இலக்கியங்கள் சம கால மக்களின் வாழ்வியலையும் பண்பாட்டையும் சிறப்பாகப் பதிவு செய்து வருகின்றன. தற்கால இலக்கியப் படைப்பாளர்களுள் எழுத்தாளர் பொன்னீலன் அவர்கள் தனக்கென தனித்த படைப்பாளுமையைக் கொண்டவர். குமரி மாவட்டத்து மக்களின் வாழ்வியலைத் தொடர்ந்து பதிவு செய்து வருபவர். அவரது படைப்புகளுள் பதிவாகியுள்ள குமரி மாவட்டத்து மக்களின் பண்பாட்டுச் சாராம்சமான பொருள் சார்ந்த தரவுகளை அறிவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## மானிடவியல் கோட்பாடு

இலக்கியம் அனுபவத்தின் அடிப்படையில் படைக்கப்படுகின்றன. தமிழிலக்கிய ஆய்வாளர்கள் அதன் நயத்தை ஆய்வு செய்த காலம் போய் இன்று அயல்நாட்டாளர்களின் கோட்பாட்டாய்வை இலக்கியத்தோடு பொருத்திக்காணும் ஆய்வுப்போக்கு தற்காலத்தில் சிறந்து வருகின்றது. இலக்கியத்தின் தன்மையை அறிவிக்கும் இத்தகைய இலக்கியக்கோட்பாடுகளுள் மானிடவியல் கோட்பாடும் ஒன்று. இக்கோட்பாடு இலக்கியத்தில் பதிவாகியுள்ள ஒரு குறிப்பிட்ட மானிட சமுதாயத்தின் வாழ்வியலைப் பதிவு செய்யத் துணை நிற்கின்றன. மனிதன் குழுவாக வாழும் இயல்புடையவன். அவனது குழு ஒரு குறிப்பிட்ட பண்பாட்டையும் பழக்கவழக்கத்தையும் பின்பற்றி நடக்கும். அப்பண்பாடு பின்வரும் சமுதாயத்திற்கு ஒரு வழிகாட்டலாக அமையும். எனவே மனிதனின் பண்பாட்டு ஆய்வுகள் மனித சமுதாயத்தின் ஒட்டுமொத்த வாழ்வியல் அடிப்படைகளில் காணப்படும் பொதுமைகளை அடையாளங்காண உதவுகின்றன. அவ்வகையில் ஒரு குறிப்பிட்ட வட்டாரம் சார்ந்த படைப்பாளன்

தனது வட்டாரத்தின் பண்பாட்டைத் தன்னை அறியாமல் தனது இலக்கியத்தில் பதிவிடுகிறான். அப்பண்பாட்டை அதனை அளக்கும் கோட்பாடுகள் கொண்டு அளவிடுவது பண்பாடு சார்ந்த கோட்பாட்டாய்வாகக் கொள்ளப்பெறுகின்றது. அவ்வகையில் நாஞ்சில் வட்டார படைப்பாளர் பொன்னீலன். அவரது பிச்சிப்பூ என்னும் குறுநாவலில் பதிவாகியுள்ள பொருட்கள் பற்றிய தரவுகளைக் கொண்டு 'பொருள் சார் பண்பாட்டு நிலைகளை அறிவது இதன் நோக்கம்.

## இலக்கிய மானிடவியல்

மானிடவியல் என்பது மனித இனத்தை ஆராயும் அறிவியல் துறை. கள ஆய்வுக் களமாகத் திகழ்ந்து வந்த இத்துறை சமீப காலங்களில் இலக்கியத்தையும் ஆய்வுக்களமாகக் கொண்டு ஆராய்ந்து வருகின்றது. ஒரு குறிப்பிட்ட இனத்தை அல்லது இடத்தைச் சமூகத்தைச் சார்ந்த படைப்பாளன் தனது இனத்து மக்களின் பண்பாட்டுப் பழக்கவழக்கங்களைத் தான் படைக்கும் படைப்பில் அடையாளப்படுத்துவான். அவ்விலக்கியத்தை ஆராயும் போது படைப்பாளன்தன் இனத்துப் பழக்கவழக்கம் பண்பாடு பதிவாகின்றது. "இலக்கியப் படைப்புகளை ஆதாரமாகக் கொண்டு சமூக நிறுவனங்களை முதன்மைப்படுத்தி ஆராயக்கூடிய ஓர் ஆய்வு முறையியலே இலக்கிய மானிடவியல் (Thananjeyan, 2014).

## பொன்னீலன் படைப்புகளில் மானிடவியல்

மனித சமுதாயத்தைப் பதிவு செய்யும் இலக்கியக் கோட்பாடுகளுள் மானிடவியல் முக்கியமானது. மனித சமுதாயத்தைப் பதிவு செய்யும் படைப்பாளர்களுள் எழுத்தாளர் பொன்னீலன் தலைசிறந்தவர். அவரது படைப்புகள் குமரி மாவட்டத்து மக்களின் வாழ்வியலைப் பொதிந்து வைத்துள்ள செய்திப்பெட்டகமாக அறியப்படுகின்றன. குமரி மாவட்டத்து மக்களின் புழங்கு பொருட்கள் அவர்தம் பண்பாட்டைப் பட்டியலிடுகின்றன. அவர்களின் நம்பிக்கைகள் பொருள் சாராப்பண்பாட்டை உரைக்கின்றன. ஒரு காலகட்டத்தில் வாழ்ந்த, ஓரிடத்தைச் சார்ந்த வேறுபட்ட இன மக்களின் அடையாளம் பொன்னீலனின் படைப்புகளில் துல்லியமாக அடையாளப்படுகின்றன.

## பண்பாட்டு மானிடவியல்

மானிடவியலின் ஒரு பிரிவாகத் திகழ்வது பண்பாட்டு மானிடவியல். இது மானிட சமுதாயத்தின் பண்பாட்டை சில அளவீடுகள் கொண்டு அளக்கின்றன. எனவே ஆய்வாளர்கள் அதனை பண்பாட்டு மானிடவியலின் வகைகள் என்று கொண்டு அதன் அடிப்படையில் ஆராய்கின்றனர். அவ்வகைகளாவன பொருள் சார் பண்பாடு மற்றும் பொருள் சாராப்பண்பாடு போன்றவை ஆகும். பொருள் சார் பண்பாடு ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் வாழ்விடச் சூழல் புழங்கு பொருட்கள் வெளிப்படுத்தும் பண்பாட்டை நிறுவுகின்றன. திருவிழாக்கள் நம்பிக்கைகள் பழக்கவழக்கங்கள் போன்றவை பொருள் சாரா நிலையில் ஒரு குறிப்பிட்ட மக்களின் பண்பாட்டைப் பதிவு செய்கின்றன. (Baktavatchala Bharathi, 2014) அவ்வகையில் பொன்னீலனின் படைப்புகளில் பதிவாகியுள்ள குமரி மாவட்டத்து மக்களின் பொருள் சார் மற்றும் பொருள் சாராப் பண்பாட்டை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பொருள் சார் பண்பாடு

மானிட சமுதாயம் கண்டடைந்த பண்பாட்டை அறிவதற்கான கண்ணாடிகள் இலக்கியங்கள். அதனை வகைப்படுத்தி அளவிடும் அளவுகோள்களே கோட்பாடுகள். அவ்வகையில் மனிதன் பயன்படுத்திய பொருட்கள் அவனது அறிவு, சிந்தனை, மண்ணின் தன்மை, வாழ்விடச்சூழல் போன்றவற்றை வெளிப்படுத்தி நிற்கின்றன. பண்பாட்டு மானிடவியலின் ஒரு கூறாக விளங்கும்

பொருள் சார் பண்பாடு இவ்வகை ஆராய்ச்சியை மேற்கொள்கின்றன. அப்பண்பாடு கீழ்க்கண்ட பொருள் வகைகளின் அடிப்படையில் ஆராயப்படுகின்றன.

1. மனிதன் தன் தேவைக்காக வாழும் வாழிடம்
2. உணவுமுறைகள்
3. உடை வகைகள்
4. அணிகலன்
5. உழவுக்கருவிகள்
6. போக்குவரத்துச்சாதனங்கள்
7. பிற தொழில் கருவிகள்
8. விளையாட்டுச்சாதனங்கள்
9. பணமதிப்பு

## பொன்னீலன் படைப்புகளில் பொருள் சார் பண்பாடு

“பொருளும் பண்பாடும் நாணயத்தின் இரு பக்கங்கள் மக்கள் பயன்படுத்திய பொருட்களின் அடிப்படையில் அவர்தம் பண்பாட்டை அறிவது பொருள் சார் பண்பாட்டின் நோக்கமாகும் (Baktavatchala Bharathi, 2005). “மக்கள் அவர்களின் தேவைகளுக்காகச் செய்து கொள்ளும் அனைத்து வகையான பொருட்களும் பொருள் சார் பண்பாட்டில் அடங்கும்” என்பார் மானிடவியல் ஆராய்ச்சியாளர் பக்தவத்சல பாரதி அவர்கள் (Baktavatchala Bharathi, 2014). மேலும் “பண்பாட்டு மாற்றம் ஏற்பட்டுச் சில குறிப்பிட்ட தேவைகள் அற்றுப்போகுமானால் அவற்றிற்குரிய பொருள்களும் மறந்து போகும். ஆகவே ஒரு பண்பாட்டைச் சேர்ந்த அனைத்துப் பொருள்களையும் கொண்டு அம்மக்களின் பண்பாட்டைப் பெருமளவு அறிய முடியும்” என்று பொருள் சார் பண்பாட்டாய்வின் தேவையை அவர் வலியுறுத்திக் கூறியுள்ளார். பொன்னீலன் தனது புதினங்களில் குமரி மாவட்டத்து மக்கள் புழங்கிய பொருட்கள் அதன் பயன்பாடு மற்றும் அதன் சிறப்பு போன்ற செய்திகளைச் சிறப்பாகப் பதிவு செய்துள்ளார் (Baktavatchala Bharathi, 2005). எனவே பொன்னீலன் நாவல்களில் பதிவாகியுள்ள புழங்கு பொருட்களை ஆய்வது குமரி மாவட்டத்து மக்களின் பொருள் சார் பண்பாட்டை அறிய துணை செய்யும் (Baktavatchala Bharathi, 2005).

## தொழில் சார் கருவிகள்

“புழங்கு பொருட் பண்பாட்டைக் கலை என்றும் கைவினை என்றும் இரண்டு உட்பிரிவுகளாகக் காண்கின்றனர்” என்று கூறும் ஹென்றி கிளாஸி அவ்வாறு காணும் போக்கு மேலைத்தேயப் பண்பாட்டினை முன்வைத்துச் செய்யப்பட்டது” என்று கூறி “உலகம் தழுவிய பல பண்பாடுகளில் கலை, கைவினை என்ற பாகுபாடோ அழகு, பயன்பாடு என்ற பாகுபாடோ இல்லை” என்று தெளிவுறுத்துகிறார் (Baktavatchala Bharathi, 2005). பொன்னீலனின் படைப்புகளில் பனையேறுதல், வண்டித்தொழில், ஆகிய தொழில்துறைக் கருவிகள் கூறப்பட்டுள்ளன. பனையேறி பயினி எடுப்பவன் கையோடு முருக்கந்தடி, பயினி குடவை, அருவாப்பெட்டி, பாளை அரிவாள் போன்ற பொருட்களை உடன் எடுத்துச் செல்வதாக பொன்னீலன் கூறியுள்ளார். இங்குப் பனையேறியின் தொழில் சார் பொருட்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன (Baktavatchala Bharathi, 2005).

மாட்டு வண்டியில் சுமை தூக்கி குறிப்பிட்ட நகரத்தில் கொண்டு சேர்ப்பிக்கும் பணியை மாட்டு வண்டிக்காரனாகிய மூர்த்தியார் என்னும் பாத்திரம் செய்வதாக பொன்னீலனின் பிச்சிப்பூ புதினம் பதிவு செய்துள்ளது. இதில் மாட்டு வண்டியின் உறுப்புக்களான குடம், மசகு, அச்சு, ஆரக்கால் எனப்படும் சக்கரம் போன்றவற்றை மூர்த்தியார் பராமரிக்கும் திறம் வருணிக்கப்பட்டுள்ளது.

“தம்பி மூர்த்தியாரு தன் வண்டியக்கழட்டி வண்டிக்கக் குடத்துக்கும் அச்சுக்கும் மசகு பூசிக்கிட்டு நின்னாரு” பொன்னீலனின் பிச்சிப்பூ என்னும் புதினம் பனையேறும் தொழில் செய்யும் நாடார் இனத்தைப் பற்றிய பதிவாகும். இதில் பனையேறிகள் பனையேறுவதற்குப் பயன்படுத்தும் கருவிகள் கூறப்பட்டுள்ளன. இதனை “அவருக்க இடது தோளுல நீண்ட முருக்கந்தடி. அதுக்க முன்பக்கத்துல

பருவமான நுங்குக்குலயும் பின்பக்கம் பயினி நிறைஞ்ச குடுவையும் தொங்குது. அவருக்க இடுப்புல அருவாப்பெட்டி கடகடக்குது. கைப்பிடிப்போட்ட பாதி நிலா மாதிரி இருந்த பாளையரிவாள எடுத்து” ஆகிய வரிகள் எடுத்துக்காட்டுகின்றன (Ponneelan, 2020).

## மருந்துகள்

பொன்னீலன் படைப்புகளில் பெரும்பான்மையான மருத்துவக்குறிப்புகள் பதிவாகியுள்ளன. சின்ன நீலன் என்னும் பாத்திரம் தன்னிடம் வரும் மக்களின் நோய்களைத் தீர்த்து வைத்ததாகப் பதிவாகியுள்ளது,

## தோல் நோய் மருந்துகள்

தோல் நோய் உற்றவர்களுக்கு சின்ன நீலன் உதவுகிறார். ‘கரையான் கட்டிய புற்றிலிருந்து மண்ணை எடுத்து தோல் நோய் உற்றவர்களின் மேனியில் பூசிவிட்டு வெயிலில் காய விடுவார். அல்லது களிமண்ணை உடலில் பூசி வெயிலில் காயவிட்டு தோல் நோயைப் போக்குவார்’ என்னும் குறிப்பு ‘பிச்சிப்பூ’ புதினத்தில் பதிவாகியுள்ளது.

## எலும்பு நோய் மருந்து

வாத நோய்க்கு மருந்தாகக் காயத்திருமேனி எண்ணெய் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் எலும்பு முறிவுகளுக்குமான மருந்தும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. பிச்சிப்பூ புதினத்தின் கதைத்தலைவர் மூர்த்தியார். அவர் எலும்பு முறிவுகளுக்கான வைத்தியக்கலை அறிந்தவராகச் சுட்டப்பட்டுள்ளார். பனையேறுபவன் அங்கிருந்து விழுந்தால் எலும்பு நொறுங்கி தசைகள் கூழாகிப் போகும். மூர்த்தியார் எலும்பு நொறுங்கிய இடத்தைக் கண்டறிந்து மருந்தெண்ணைய் தடவி மூங்கில் குச்சிகளை வைத்து மருந்தெண்ணெயில் தோய்க்கப்பட்ட துணியால் இறுக்கமாகக் கட்டுவார். அம்முறிவு பதினைந்து நாட்களில் சரியாகி பனையேறி தனது தொழிலைப் பார்க்க கிளம்பிவிடுவான் என்று பிச்சிப்பூ புதினம் பதிவு செய்துள்ளது. ஆனால் மருந்தெண்ணெயின் பெயர் குறிப்பிடப்படவில்லை.

## பனைபடு பொருட்கள்

பொன்னீலன் பனையேறும் நாடார் இனத்தைச் சார்ந்தேரின் பதிவுகளாகவே தனது படைப்பைப் படைக்கிறார். தமிழகத்தில் பனைபடு பொருட்களின் எண்ணிக்கை அதிகம். அது தமிழகத்தின் பெரும்பான்மையான நிலப்பரப்பின் பண்பாடாக அமைந்திருந்தது. பனையைக் கலைகளின் தாய்வீடு என்பர். திருக்கார்த்திகை நாளின் போது கொளுத்தப்படும் சொக்கப்பனை, பனங்கிழங்கு அகழ்தலிலுள்ள நுணுக்கம், தவுணு, பதனி, நொங்கு, கள், போன்ற பனை சார் உணவுப்பொருட்களும் பனையோலைக் கொழுக்கட்டைக்குப் பனை ஓலையைத் தேர்ந்தெடுப்பதில் உள்ள நேர்த்தி போன்றவை அவரது படைப்புகளில் கூறப்பட்டுள்ளன.

## பனையோலைத் தோண்டி

திருவிதாங்கூர் பகுதியில் கிணற்றில் நீர் இறைப்பதற்குப் பனையோலையால் செய்தத் தோண்டியைப் பயன்படுத்துவர். இந்தத் தோண்டி ஓரிரு காலங்களுக்கு மட்டுமே பயன்பாட்டில் இருக்கும். பயன்படுத்துவோரின் கைப்பக்குவத்தைப் பொறுத்து அதன் பயன்படும்காலம் நீளும். இதில் உப்பும் புளியும் வைத்துக் கிணற்றுக்குள் விட்டு கிணற்று நீரைச் சுத்தம் செய்வர். இப்பனையோலைத் தோண்டி பொன்னீலனின் படைப்பிலும் இடம்பெறுகின்றது. நேசமணி என்பவர் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர். நேர்மையான வழக்கறிஞர். சமத்துவத்திற்காக உழைத்து வருபவர். அவரை அறிமுகப்படுத்தும் இடத்தில்

"ஒரு ஊரணிக்குள்ள இருந்மு வெளியே ஏறிக்கிட்டிருந்தாரு நேசமணி. காக்கட்டைக்க இரண்டு பக்கமும் ரெண்டு பெரிய்ய பனஓலத்தோண்டி. தோண்டி நிறையத்தண்ணி. ஒவ்வொரு தோண்டியும் ஒரு பானத்தண்ணி கொள்ளும்" என்னும் வரிகள் பயோலைத்தோண்டியின் பயன்பாட்டை நமக்கு எடுத்துரைக்கின்றது (Ponneelan, 2020). இவை போக பனைபடு பொருட்களாகச் சொக்கப்பனை கொளுத்துதல், ஓலைப்படக்கு தயாரித்தல், சிறை தண்டனையின் ஒருவகையான பனந்தடியில் மாட்டுதல் எனும் தண்டனைக்குப் பயன்படும் பனந்தடி, பனையோலை கீறல் தொழில், போன்ற பொருட்களும் இப்புதினத்தின் வழி அறிய முடிகின்றது.

## சுவர் எழுப்புவதல் பதநீரின் பயன்பாடு

பனைமரத்திலிருந்து பெறப்படும் பதநீர் நாஞ்சில் நாட்டு மக்களுக்குக் குளிர்ச்சியான நீராகாரமாக மட்டும் பயன்படவில்லை. மாறாக வீட்டின் சுவர் எழுப்பவும் பயன்பட்டிருக்கின்றது. பிச்சிப்பூ புதினத்தில் சின்ன நீலன் இடிந்து போன அம்மன் கோவிலைக் கட்டுவதற்குச் செம்மண்ணோடு பதநீரைக் குழைத்து உறுதியானதொரு கோயஜலை எழுப்பியதாக புதினத்தில் இடம்பெற்றுள்ளது.

## விளையாட்டுக்கருவிகள்

பொன்னீலனின் பிச்சிப்பூ புதினத்தில் பட்டம் விடுதல் குறித்த செய்திகள் கூறப்பட்டுள்ளன. பட்டத்தின் அளவுகளாகக் கதவுப்பட்டம், சன்னல் பட்டம் ஆகிய பெயர்கள் கூறப்பட்டுள்ளன. நாட்டுக்கத்தாளைக் குருத்துகளை இரண்டு மாதத்திற்கு முன்பே ஒடித்து நல்ல தோகைகள வச்சிச் சிரட்டையால சீவி கற்றாழையின் சதையை வழித்து வெள்ளைத்தும்பைப் பிரித்து எடுப்பார்கள். அதை மூன்று பிரியாகத் தொடையில் வைத்துத் திரித்துத் தென்னை ஈக்குப்பருமனில் கயிறாக்குவார்கள். அந்தக்கயிறு ஒருமைல் ஒன்னரை மைல் நீளம் வந்ததும் அதை இரண்டு முழக்கம்புல இறுக்கமாகச் சுற்ற வேண்டும். அந்தப்பட்டத்தைச் சுமக்க ஒருவன் வேண்டும். அந்த அளவிற்குக் கனமாக இருக்கும். பட்டம் சுமக்க ஓருத்தன் கயிறு சுமக்க ஒருத்தன் பட்டத்தை மேலேற்ற நாலைந்து பேர் என ஒரு கூட்டமே வேண்டும். பட்டம் கதவுப்பட்டமா? சன்னல் பட்டமா? என்பதைப் பொறுத்து மூங்கிலை உடைத்து சீம்பிலிப் மட்டையைச் சீவி நாலு பக்கம் நாலு குறுக்குச் சட்டங்கள் அமைக்க வேண்டும். பிறகு ஒவ்வொரு முக்கிற்கும் பெருக்கல் வடிவச்சட்டங்களை நூலால் கட்ட வேண்டும். உறுமி என்னும் பெயருடைய காகிதத்தை நீளவாக்குல ஒரு இன்ச் அகலத்தில் பல்லுப்பல்லா வெட்டி நூலில் ஒட்டிக்கட்ட வேண்டும். இவ்வாறு தயார் செய்யும் பட்டம் காற்றில் பறக்கும் போது அதன் ஓசை பல மைல்களுக்கு அப்பால் வரை கேட்கும் என்று சிறுவர் பட்டம் விடுதலின் நேர்த்தியை விவரிக்கிறார்.

## தாழம்பூக்குடை

பொன்னீலன் படைத்துக் காட்டிய நாஞ்சில் மக்களின் பொருள் சார் பண்பாடுகளுள் தாழம்பூக்குடையும் ஒன்று. அதனைத் தாழங்குடை என்றும் கூறுவர். இக்குடை தாழம்பூவினுடைய மடல்களைப் பாடம் செய்து குடை வடிவில் வேய்ந்து கைப்பிடி செருகப்பட்டுத் தயாரிக்கப்படுவது. தாழம்பூ வெளிர் மஞ்சள் நிறத்தில் இருக்கும். இக்குடை வெளுத்திருக்கும். மற்ற குடைகளைப் போல மடக்க முடியாது. இக்குடை பொன்னீலன் அவர்களின் 'பிச்சிப்பூ' புதினத்திலும் இடம்பெறுகின்றது. மீட் ஐயர் எனப்படும் ஆங்கிலேய அதிகாரி பள்ளிக்கூடங்களின் தலைமைக் கண்காணிப்பாளர் இந்திய நாட்டில் சமத்துவத்தைப் பரப்பும் முயற்சியில் ஈடுபட்டவர். அவர் குதிரையில் வரும்போது ஒரு அடிமைக்குழந்தையைக் கண்டதாகவும் அதனை விசாரிக்க ஒரு ஜென்மியை அழைத்ததாகவும் அவர் கையில் தாழ்ம்பூக்குடை இருந்ததாகவும் வருணிக்கப்பட்டுள்ளது (Ponneelan, 2020).

பணம், சக்கரம், காசு - இவற்றின் பயன்பாடு இந்தியாவின் தெற்குப்பகுதியிலிருந்த ஒரு நிலப்பரப்பே தென்திருவிதாங்கூர். இந்தியாவின் ஏனைய நிலப்பரப்பிலிருந்தநாணயங்களிலிருந்து இப்பகுதியின் நாணயங்களும் அதன் மதிப்பும் அதற்கான பெயர்களும் வேறுபட்டிருந்தன. இது மிகப்பழைய பண மதிப்பீடாக் கருதப்படுகிறது. அவை பணம், அச்சு, சக்கரம், மற்றும் காசு

ஆகியவையே. நான்னு சக்கரங்கள் சேர்ந்தது ஒரு பணம். பதினாறு காசுகள் சேர்ந்தது ஒரு சக்கரம். இப்பணமதிப்பு 1949 வரைப் புழக்கத்தில் இருந்துள்ளது. இவை பொன்னீலன் படைத்துள்ள பிச்சிப்பூ புதினத்தின் பல இடங்களில் சுட்டப்பட்டுள்ளது (Ponneelan, 2020).

## அலங்காரங்கள்

“மஞ்சளையும் சுண்ணாம்பையும் கணக்கா எண்ணெயில கலந்து உள்ளங்கையில தேய்ச்சி நெத்தி, கன்னம், மூக்கு, கழுத்து, காதுமடல் எல்லாத்திலேயும் லேசாப் பூசிவிடுவா. ஒரு பழந்துணியால எல்லாத்தையும் மேலோட்டமாகத் துடைச்சிவிட்டா, அந்தப் பொம்பள கருப்பா சிவப்பான்னு சொல்லவே முடியாம முகம் அப்பிடி ஒரு நிறங் கொடுத்திரும்” (Ponneelan, 2020).

நாட்டுப்புற பெண்கள் தங்களை அழகுபடுத்திக் கொள்ளும் நுணுக்கம் பிச்சிப்பூ நாவலில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ‘பிச்சிப்பூ’ கதையின் தலைவி பிச்சிப்பூ. அவளது ஒப்பனைத்திறத்தை அவளது கணவனும் கதைத்தலைவனுமான மூர்த்தியார் அழகுபட விவரிக்கிறார். மஞ்சளையும் சுண்ணாம்பையும் அளவாக எடுத்து கலந்து முகத்தில் பூசினால் முகம் சிவந்த நிறத்தில் பளபளக்கும் என்னும் அழகுக்குறிப்பு இந்நாவலில் பதிவிடப்பட்டுள்ளது.

## முடிவுரை

பொன்னீலனின் பிச்சிப்பூ புதினத்தில் நாஞ்சில் வட்டார மக்களின் பயன்படு பொருள் சார் பண்பாடு இங்கு ஆராயப்பட்டுள்ளது. பனைத்தொழில் தமிழ்நாட்டின் அடிப்படைத் தொழில் ஆதாரமாக இருந்துள்ளது. நாஞ்சில் நாடுகளில் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினர் பனைத்தொழில் செய்துள்ளனர். பனைபடு பொருட்களும் அதன் பயன்பாடும் பிச்சிப்பூ புதினத்தில் சிறப்பாக பதிவாகியுள்ளன. நாஞ்சில் நாட்டு மக்கள் பயன்படுத்திய விளையாட்டுப் பொருட்கள் தாழம்பூ குடைகளின் பயன்பாடு போன்றவையும் புதினத்தில் இடம்பெற்றுள்ளது.

## References

Baktavatchala Bharathi (2005), manudaviyal kotpadugal, Adaiyalam Publications, Chennai, India.

Baktavatchala Bharathi, (2014) Diravida Manudaviyal, Adaiyalam Publications, Chennai, India

Bhakthavatsala Bharathi, S., (2011) Panpaattu Manudaviyal, Meiyappan Pathipagam, Chennai, India.

Ponneelan, (2020) Pichipoo, New Century Book House, Chennai, India.

Thananjeyan, A., (2014) Ilakkiya manidaviyal, International Institute of Tamil Studies, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License